குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம்,சாத்தூர்.
முன்னிலை : திரு. சா.வரதராஜன், பி.ஏ., பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.
2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ம் நாள் வெள்ளிக்கிழமை
DVC No.04/2026

1.திருமதி.க.காஞ்சனா, (வயது 28/26)
க/பெ.கருப்பையா ராஜ்,
2/18,கல்லமநாயக்கன்பட்டி,
வெம்பக்கோட்டை தாலுகா,
விருதுநகர் மாவட்டம். ...மனுதாரர்கள்

//எதிராக//

1)திரு.தட்சிணாமூர்த்தி, (வயது 35/26)
த/பெ.மோகன்,

2) மோகன், (வயது 68/26)
த/பெ.குமார பாலகிருஷ்ணன்(லேட்)

3)நளினி நாட்சியார், (வயது 60/26)
க/பெ.மோகன்,

4) எம்.பூபால பாண்டியன், (வயது 40/26)
த/பெ.மோகன்,

990,TNHB காலனி,
வில்லாபுரம்,
மதுரை மாவட்டம். ...எதிர்மனுதாரர்

இந்த வழக்கு 20.01.206 ம் தேதியன்று e–Filling மூலம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு 06.03.2026 ம் தேதி இந்த நீதிமன்றத்திற்கு முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ரவீந்திரன், B.sc.,B.L., அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.சோமசுந்தரம், B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பிலும் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று (06.03.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும். . . . .

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.06 18:33:40 +0530

**உத்தரவு**

1. மனுதாரர் இந்த மனுவை, குடும்ப வன்முறையில் இருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் பிரிவு 18 ன் கீழ் பாதுகாப்பு உத்தரவும், பிரிவு 20 ன் கீழ் ரூ.10,000/–மாதாந்திர வாழ்க்கை பொருளுதவியும், பிரிவு 22 ன் கீழ் ரூ.20,00,000/– இழப்பீடும், பிரிவு 19(8)ன் படி மனுதாரரின் ரூ.3,00,000/– மற்றும் 1ம் எதிர்மனுதாரர் வசம் உள்ள மனுதாரரின் 3 பவுன் தங்க நகைகள் ஆகியவற்றை திருப்பி கொடுக்கவும் உத்தரவு பிறப்பிக்க கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்த வழக்கு எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பானை சார்பு செய்வதற்காக இன்று (06.03.2026) வாய்தா போடப்பட்டுள்ளது. 1, 2, 4 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் அவர்களுடைய வழக்கறிஞருடன் முன்னிலையாகி இருந்தார்கள். மனுதாரர் அவருடைய வழக்கறிஞருடன் முன்னிலையாகி இருந்தார். இருதரப்பினரும் சமரசமாக செல்வது பற்றி பேசிய போது மனுதாரருக்கு ரூ.1,00,000/– பணம், 1ம் எதிர்மனுதாரர் வசம் உள்ள மனுதாரரின் 2 1/2 பவுன் தங்க நகைகள், மனுதாரின் பொருட்கள், மற்றும் மாதாந்திர வாழ்க்கை பொருளுதவியாக ரூபாய் 4,000/–ஆகியவற்றை கொடுக்க உத்தரவு பிறப்பித்தால் போதுமானது என்று மனுதாரர் தெரிவித்தார். அவருடைய வாக்குமூலம் இந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது. அது பின்வருமாறு:

> "நான் என்னுடைய கணவர் மற்றும் அவர்களின் உறவினர்கள் மீது குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். இன்று நீதிமன்ற விசாரணைக்கு என்னுடைய கணவர், மாமனார் மற்றும் கணவரின் சகோதரர் ஆஜரானார்கள். நீதிமன்றத்தில் பேசப்பட்ட சமரசத்தின்போது என்னுடைய கணவர் அவரிடமிருக்கும் நாங்கள் அவருக்கு வழங்கிய சுமார் 2 பவுன் செயின் மற்றும் ½ பவுன் மோதிரம், பண்டபாத்திரங்கள் மற்றும் ஆடைகள், எங்களுக்கு குழந்தை பிறப்பிற்காக செலவு செய்த பணம் ரூ.1,00,000/– தருவதாக கூறினார். மேலும், என்னுடைய வாழ்க்கை பொருளுதவிக்காக மாதம் ரூ.4,000/– தருவதாகவும் கூறினார். அந்த சமரச முடிவை நான் ஏற்றுக்கொண்டு வழக்கை முடித்து வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். எனக்கு தரவேண்டிய பணம் ரூ.1,00,000/–த்தை என்னுடைய கணவர் இன்றிலிருந்து 3 மாதங்களில் தருவதாக கூறினார். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். என்னுடைய கணவருக்கு வழங்கிய செயின் மற்றும் மோதிரம், பண்டபாத்திரங்கள், ஆடைகளை என்னுடைய கணவர் வரும் ஞாயிற்றுக்கிழமை அவருடைய வீட்டிற்கு வந்து எடுத்து செல்லும்படி கூறினார். அவ்வாறே நான் அதை சென்று பெற்றுக்கொள்கிறேன். என்னுடைய கணவர் எனக்கு தருவதாக கூறிய மாத வாழ்க்கை பொருளுதவி தொகை ரூ.4,000/–த்தை என்னுடைய வங்கி கணக்கில் நேரடியாக ஒவ்வொரு மாதமும் 5ம் தேதிக்குள் செலுத்த உத்தரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய திருமண உறவு தொடர்பான பிரச்சனையை நாங்கள் உரிய நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்கிறோம். "

S VARATHARAJAN

Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.06 18:33:48 +0530

3. நீதிமன்றத்தில் முன்னிலையாகி இருந்த 1வது எதிர் மனுதாரரிடம் கேட்ட போது, மனுதாரர் கோரிய ரூ.1,00,000/- 1ம் எதிர்மனுதாரர் வசம் உள்ள மனுதாரரின் 2 1/2 பவுன் தங்க நகைகள், பொருட்கள் மற்றும் மனுதாரருக்கு வாழ்க்கை பொருளுதவியாக மாதம் ரூபாய் 4000/- ஐ ஆகியவற்றை கொடுக்க தயாராக இருப்பதாக கூறினார். அவருடைய வாக்குமூலமும் இந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது. அது பின்வருமாறு:

> "என்னுடைய மனைவி என்மீதும், என்னுடைய குடும்ப உறுப்பினர்கள் மீதும் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இன்று வழக்கு விசாரணைக்கு நான், என்னுடைய தந்தை மற்றும் சகோதரர் முன்னிலையானோம். நான் தற்போது தனியார் கல்லூரியில் பேராசிரியராக வேலை செய்கிறேன். எனக்கு மாத சம்பளம் ரூ.26,268/- ஆகும். இன்று நீதிமன்றத்தில் நடைபெற்ற சமரசத்தின் முடிவில் நான் எனக்கு எங்களுடைய திருமணத்தின்போது என்னுடைய மனைவி தரப்பில் அணிவிக்கப்பட்ட சுமார் 2 பவுன் செயின் மற்றும் ½ பவுன் மோதிரம், மற்றும் பண்டபாத்திரங்கள் மற்றும் ஆடைகள், எங்களுக்கு குழந்தை பிறப்பிற்காக செலவு செய்த பணம் ரூ.1,00,000/- ஆகியவற்றை திருப்பி கொடுப்பதாக ஒப்புக்கொள்கிறேன். மேலும், என்னுடைய மனைவியின் வாழ்க்கை பொருளுதவிக்காக மாதம் ரூ.4,000/- அவர் மறுமணம் செய்துகொள்ளும் வரை கொடுப்பதாக ஒப்புக்கொள்கிறேன். அந்த சமரச முடிவு என்னுடைய மனைவி இன்று நீதிமன்றத்தில் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் எடுக்கப்பட்டதாகும். அந்த சமரச முடிவை என்னுடைய மனைவியும் ஏற்றுக்கொண்டார். நான் என்னுடைய மனைவிக்கு கொடுக்கவேண்டிய பணம் ரூ.1,00,000/-த்தை இன்றிலிருந்து 3 மாதங்களில் என்னுடைய மனைவிக்கு அவரது வங்கி கணக்கு மூலமாக செலுத்திவிடுகிறேன். எனக்கு திருமணத்தின் போது வழங்கிய செயின் மற்றும் மோதிரம், பண்டபாத்திரங்கள், ஆடைகள் ஆகியவற்றை வரும் ஞாயிற்றுக்கிழமை என்னுடைய மனைவி எங்களுடைய வீட்டிற்கு வந்து எடுத்து செல்ல நான் அனுமதிக்கிறேன். நான் என்னுடைய மனைவிக்கு தருவதாக கூறிய மாத வாழ்க்கை பொருளுதவி தொகை ரூ.4,000/-த்தை என்னுடைய மனைவியின் வங்கி கணக்கில் நேரடியாக ஒவ்வொரு மாதமும் 5ம் தேதிக்குள் செலுத்த சம்மதிக்கிறேன். எங்களுடைய திருமண உறவு தொடர்பான பிரச்சனையை நாங்கள் உரிய நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்கிறோம். என்னுடைய மனைவி தற்போது வேலைக்கு செல்லவில்லை, ஒருவேளை அவர் வேலைக்கு சென்றாலும் அவருக்கு மறுமணம் ஆகும் வரை நான் வாழ்க்கை பொருளுதவியை கொடுப்பேன். "

4. இரு தரப்பினரும் எவ்விதமான வற்புறுத்தல் மற்றும் தூண்டுதல் இல்லாமல் அவர்களுடைய பிரச்சனையை ஒருமித்த மனதோடு முடித்துக் கொள்ள வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள் என்று இந்த நீதிமன்றம் திருப்தி அடைகிறது. மேலும், எதிர்மனுதாரர் தான் தனியார் கல்லூரியில் பேராசிரியராக வேலை செய்வதாகவும், அவருக்கு மதாம் ரூபாய் 26,268/- சம்பளம் என்றும், எதிர்மனுதாரர் கூறியுள்ளதை மனுதாரர் ஏற்றுக்கொண்டுள்ளதால்,



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.06 18:33:59 +0530

மனுதாரருக்கு மாதாந்திர வாழ்க்கை பொருளுதவியாக ரூபாய்.4,000/- செலுத்துவதாக எதிர்மனுதாரர் கூறியது நியாயமானதாகவும், ஏற்றுக்கொள்ளத்தக்க தாகவும் இருக்கிறது.

5. எனவே, இருதரப்பினரும் ஒப்புக்கொண்டபடி, இந்த மனு பகுதியாக கீழ்கண்டவாறு அனுமதிக்கப்படுகிறது.

a. 1வது எதிர்மனுதாரர், மனுதாரருக்கு மாதாந்திர வாழ்க்கை பொருளுதவியாக ரூபாய்.4,000/-ஐ ஆங்கில மாதத்தின் 5ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

b. மனுதாரின் 2 பவுன் செயின், ½ பவுன் மோதிரம், பண்ட பாத்திரங்கள், ஆடைகள் போன்றவற்றை 1வது எதிர்மனுதாரர் வரும் ஞாயிற்று கிழமை (08.03.2026) மனுதாரரிடம் ஒப்படைக்க வேண்டும்.

c. ரூ.1,00,000/-பணத்தை 1வது எதிர்மனுதாரர் 10.05.2026ம் தேதிக்குள் மனுதாரருக்கு செலுத்த வேண்டும்.

d. செலவுத் தொகை எதுவும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு மார்ச் மாதம், 06-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S VARATHARAJAN

Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.06 18:34:07 +0530

நீதித்துறை நடுவர் எண்-2, சாத்தூர்.

**இணைப்பு:-**

1. மனுதாரரின் வாக்குமூலம்.
2. 1வது எதிர்மனுதாரரின் வாக்குமூலம்.